திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜுடிஷியல் டிமாண்ட்மீது அடிக்கடி பேசுவதற்கு நமக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடு கிற காரணத்தாலே பொதுவாக ஹைகோர்ட்டிலே வழக்காட வருகின்றவர்கள் இருப்பதற்கு வசதியில்லாமல் பெஞ்சுகள் முதலிய வசதிகள் இல்லாமல் இருக்கிற காரணத்தினால் அவர்கள் பே மாஸ்டர், அதாவது வழக்குக்கு கோர்ட் பீஸ் கட்டுகிறார்களே என்பதை மனதிலே வைத்து, வருகின்றவர்கள் இருப்பதற்கு பெஞ்சுகள், நாற்காலிகள் போட்டு, தங்களுடைய வழக்கு நடப்பதைப் பார்ப்பதற்கு வருகின்றவர்களுக்குக் குறைந்த பட்சம் அப்படிப் பட்ட வசதிகளைச் செய்துகொடுப்பதற்கு இந்த அரசு ஹைகோர்ட்டுக்குப் பரிந்துரை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: உயர்நீதி மன்றத்திலே தங்களுடைய வழக்குகள் நடந்துகொண்டிருக்கும்பொழுது அமர்ந்து பார்ப்பதற்கு அருமையான நாற்காலிகள் போடப்பட்டிருக்கின்றன. நானேகூடப் பார்த்தி ருக்கிறேன். ஆகவே, பொதுமக்களுக்கு என்ன தேவை என்று உயர்நீதி மன்றம் பரிந்துரை செய்கிறதோ அதையெல்லாம் நாம் முடிந்த அளவுக்குச் செய்து தருகிறோம்.

Sub-Magistrate's Courts at Vannarpet

*** 299 Q.—Thiru T. MARTIN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is a proposal to shift the Sub-Magistrate's Courts at Vannarpet to Kokarakulam in Tirunelveli district?**

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே வண்ணாரப்பேட்டையி லுள்ள நீதிமன்றத்தை கொக்கரகுளத்திலே உள்ள கலெக்டர் ஆபீசுக்குக் கொண்டுவரவேண்டுமென்று அங்கேயுள்ள வழக்கறிஞர் சங்கம் ஏகோபித்து முடிவுசெய்து அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளதா? ஆமெனில் அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வழக்கறிஞர் சங்கம் முடிவு செய்ததைப் பற்றி என்னிடத்திலே விவரம் இல்லை. ஆனால் அந்த நீதிமன்றம் கலெக்டர் ஆபீசுக்கு மாற்றப்படவேண்டுமென்று அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. உயர்நீதி மன்றத்தின் சிபாரிசின்பேரிலே இதுகுறித்துத் தகுந்த முடிவு எடுக்கப் படும்.

ஹாஜி ம. மூ. பீர்முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல் வேலியில் கொக்கரகுளத்திலே வழக்குமன்றம் இருக்கிற இடம் அவ்வளவு வசதியாக இல்லாமல் இருக்கிற காரணத்தினாலும் வண்ணாரப்பேட்டையிலுள்ள வழக்குமன்றத்தை பாளையங்கோட்டை ஹை கிரவுண்டிற்கு மாற்றுவதற்கு— மதுரையில் இருப்பதைப் போன்று செய்வதற்கு—அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா? இல்லையென்றால் அரசு அதைக்குறித்துப் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: திருநெல்வேலி மாவட்டத்திலே இருக்கிற நீதிமன்றங்களுக்குச் சரியான கட்டடங்கள் இல்லை என்பதை நானே சென்று பார்த்தேன். அங்கேயுள்ள நீதிபதிகள் அழைத்துச் சென்று காண்

1970 செப்டம்பர் 8]

பித்தார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் நீதிமன்றங்கள் சிறந்த இடங்களில் அமைக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் ஒவ்வொரு மாவட்டமும் அதற்கான செயற்குறிப்பைத் தயாரித்து வருகிறார்கள். அந்தச் செயற்குறிப்பு வந்ததற்குப் பிறகு படிப்படியாக பேஸ்ட் புரோகிராமாக எல்லா மாவட்ட நீதி மன்றங்களுக்கு சிறந்த கட்டிடங்கள் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யலாம். நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கம் மிகுந்த முக்கியத்துவத்தைத் தந்துவருகிறது.

நாகப்பட்டினம் தொழிற்பேட்டை

* 300 வினா—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினத்தில் தொழிற்பேட்டை கட்டி முடிப்பதற்கு ஆன மொத்த செலவு எவ்வளவு ?

(இ) இப்பொழுது அங்கு என்னென்ன தொழில்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் (அ) ரூ. 4,19,470.

(இ) இந்தத் தொழிற்பேட்டையில் மொத்தம் நான்கு தொழிற் கூடங்கள் 18--5--1970-ல் கட்டி முடிக்கப்பட்டன. இவற்றில் ஒரு தொழிற் கூடம் இரும்பினாலும் எஃகினாலும் ஆன நிர்மாண வேலைகள் செய்தல் (Iron and Steel Fabrication) மற்றும் கூரைகளுக்கு வேண்டிய உத்திரங்கள் (Trusses) இரும்புக் கதவு, சன்னல்கள் தயாரித்தல் (gates and windows manufacture) முதலியவைகளுக்காக 13--7--1970-ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, இப்பொழுது என்ன என்ன தொழில்கள் அங்கே செயல்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாம் அலாட்மெண்ட் செய்ததைப்பற்றிச் சொன்னேன். தொழில் ஆரம்பித்து நடத்துகிறார்களா என்பதைப்பற்றி என்னிடத்திலே தகவல் இல்லை.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : ஏராளமான பணம் செலவு செய்து எந்தத் தொழிலும் ஆரம்பிக்கப்படாமல் சும்மா பூட்டிக் கிடக்கிறது. எனவே, தொழில் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்ய அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்த அளவிற்கு 1967-ஆம் ஆண்டு 3 லட்சத்து 23 ஆயிரம் என்ற அளவிற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுமதி வாங்கியிருக்கிறார்கள். 1970-ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டிருக்கிறது. தனியார் துறையிலே யார் யார் வாடகைக்குக் கேட்கிறார்களோ அவர்களுக்குத்தான் கொடுத்திருக்கிறோம். நாம் தொழில் நடத்துவதில்லை. அவர்கள் முன்வந்திருக்கிறார்கள். எந்த எந்தத் தொழிலுக்கு அலாட் செய்து இருக்கிறோம் என்பதைப்பற்றிச் சொன்னேன். தொழில்கள் ஆரம்பிக்க வேண்டியது அவர்களுடைய பொறுப்பு. கனம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS